Deposition of Witness
(Chapter:XVIII Code of Civil procedure)
In the Court of District Munsif,
Thiruvadanai.

Case No. O.S. No.51 /2018
Deposition of Witness of Plaintiff : PW1

| | | |
|---|---|---|
| Name | : | ஜான் |
| Father/Husband Name | : | ஜோசப் |
| Village | : | செங்குடி கிராமம் |
| Taluk | : | ஆர்.எஸ்.மங்கலம் |
| Religion | : | இந்து |
| Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 07th day of November 2022

**முதல் விசாரணை**

**சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி நிரூபண வாக்குமூலம் நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை எனது நீதிமன்ற முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**<u>எனது தரப்பில் குறியீடு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள்...</u>**

| | |
|---|---|
| 1. | 29.05.1912 யாகுசவரியாயி, சவரிமுத்துவுக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.1 ஆகும்.** |
| 2. | 10.05.1935 சூசை உடையாருக்கு செங்கோல் உடையார் வகையறா எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் அசல் **வா.சா.ஆ.2 ஆகும்.** |
| 3. | 2017ம் ஆண்டு வாதி குடும்பத்தாரின் வம்சாவழி ஜாபிதா அசல் **வா.சா.ஆ.3 ஆகும்.** |
| 4. | 30.01.2018ம் தேதி 2ம் பிரதிவாதிக்கு, வாதி அனுப்பிய மனு நகல் ஒப்புகை அட்டை **(இந்த ஆவணம் xerox என்பதால் குறியீடு செய்ய எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்) வா.சா.ஆ.4 ஆகும்.** |
| 5. | 30.01.2018ம் தேதி வருவாய் கோட்டாட்சியருக்கு வாதி அனுப்பிய மனு நகல் ஒப்புகை அட்டை **(இந்த ஆவணம் xerox என்பதால் குறியீடு செய்ய எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்) வா.சா.ஆ.5 ஆகும்.** |
| 6. | 30.01.2018ம் தேதி 1ம் பிரதிவாதியின் கணவர் ரமேஷ், ராமசாமி வகையறாவிடம் 21.03.2007ம் தேதி எழுதி வாங்கிய கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6 ஆகும்.** |
| 7. | 10.04.2018ம் தேதி தாவாச் சொத்திற்கான அடங்கல் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7 ஆகும்.** |
| 8. | 10.04.2018ம் தேதி தாவா சொத்திற்கான புலப்படம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8 ஆகும்.** |
| 9. | 16.04.2018ம் தேதி தாவாச் சொத்தை விளக்கும் பொருட்டு எடுக்கப்பட்ட புகைப்படம் அசல் **வா.சா.ஆ.9 ஆகும்.** |

**பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**